Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்


facebook.com/nimirvu

www.nimirvu.org

பார்வை – 40 | ஆடி 2020 | பக்கங்கள் – 15 | விலை – ரூபா 20.00

# கோட்பாட்டு ஐக்கியமே தேவை





அறமான அரசியலுக்குத் திரும்புவோம்



சமஷ்டிக் கட்டமைப்பு சரியான வகையில் இருந்தால் பிரிவினைவாதம் வராது



ஏன் “அவளுக்கு ஒரு வாக்கு”?

- ஆராயும் அறிவே நிமிர்வு -

# ஏன் “அவளுக்கு ஒரு வாக்கு”?






– தர்மினி பத்மநாதன் –

இலங்கை நாடாளுமன்றத்திற்கான 2020 தேர்தலில் பலமான போட்டிகளை நாம் தேர்தல் களத்தில் அவதானிக்க முடிகிறது. கட்சிகளுக்கு இடையேயான மோதுகைகள், தனிநபர்கள் மீதான விமர்சன விவாதங்கள் என பரபரத்துக் கொண்டிருக் கிறது. இது பெரும்பாலும் ஆணாதிக்க மையமான அரசியலாகவே வெளிப்படுகிறது. அதனாற்தான் இந்த அரசியலில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற கட்டாய சூழலும் ஏற்பட்டுள்ளது. அந்த மாற்றத் துக்கான ஓர் ஊடகம் தான் நாடாளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம்.

பெண்களின் அரசியல் பிரவேசம் என்பது சாதாரண பெண்களால் முடியாத காரியம் என்றும் பெண்கள் வேறு, அரசியல் வேறு என பிரித்தாளு கின்ற ஆணாதிக்க சூழலும் பெண்களின் ஆளுமை களுக்கு சந்தர்ப்பம் வழங்க மறுக்கின்றன. ஒரு தேசத்தின் விடுதலை என்ற வகையில் பெண்களும் ஓர்அங்கம் என்ற நிலை உணரப்பட்டமை வரவேற்கத் தக்கது. முழுமையாக இடைவெளி நிரப்பப்படாத போதும் இடைவெளியை நிரப்புவதற்கான முயற்சி அவசியமானது. அந்த வகையில் இந்தத் தேர்தலில் ஏன் பெண்கள் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதனை உணர வேண்டியதும் உணர்த்த வேண்டியதும் அவசியமாகின்றது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கணிச மான அளவில் பெண்கள் பங்குபற்றத் தொடங்கி னார்கள். அவர்களைக் கூட வேட்புமனு தாக்கலின் இறுதிக் கட்ட நிலையில் சட்டத்தின் கட்டாயத்தில் “கறிக்கு கறிவேப்பிலை” போன்று பயன்படுத்தினார் கள். ஆயினும் சமூகத்தின் ஒத்துழைப்பு சில பெண் களையாவது பிரதிநிதிகளாக தெரிவு செய்ய உதவியது.

2020 நாடளுமன்றத் தேர்தலிலும் யாழ் – கிளி நொச்சி தேர்தல் தொகுதியில் 10 க்கும் மேற்பட்ட பெண்கள் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் வாசுகி. ஞானகுணேஸ்வரி, ரெஜினா என்பவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் திருமதி சசிகலாவும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் அனந்தியும், ஏனைய வேறுகட்சிகளிலும் சில பெண்களும் வேட்பாளர்களாக களத்தில் இறங்கியுள்ளனர்.

ஒரு சமூகமாக நாம் வலிகளைச் சுமந்தவர்கள். வலிகளோடு போராடிக் கொண்டிருப்பவர்கள். எமக் கென சரியான அரசியல் தலைமையுடன் ஒழுக்கத் துடனும் கட்டுக் கோப்புடனும் வாழ்ந்த சமூகம் நாம். இன்று சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு சரியான வழிகாட்டல் தலைமைத்துவம் அற்ற நிலை யில் வாழ்கின்றோம். குறிப்பாக எமது பெண்களுக்கு என்று வார்த்தைகளால் விபரிக்க முடியாத அடிப்படைப் பிரச்சினைகள் பல உள்ளன.

“எமது சமூகத்திற்கான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாயின் பெண்களுக்கான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். பெண்களால் தான் அதனை உணர முடியும். ஆண்களுக்கு பெண் களின் மனநிலையை சரியாக உணரத் தெரிவதில்லை. தம்மையும் தமது கதிரைகளை பாதுகாக்கவுமே ஆணாதிக்க அரசியல் நடத்துகின்றனர். எனவே எமது பிரச்சினைகளை தீர்க்க பெண்களுக்கான உரிமை களுக்காக குரல் கொடுக்க பெண்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்” என்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவியும் பெண் வேட்பாளருமான வாசுகி.

மேலும் அதே கட்சியில் வன்னி தேர்தல் தொகுதியைச் சேர்ந்த ரெஜினா குறிப்பிடுகையில்,

"வன்னிப் பிரதேசம் என்பது மிகப் பரந்தது. போர்க் காலச் சூழலில் இருந்து இப்போது வரை நாமும் எமது பெண்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம். குறிப்பாக ஒரு நேர சாப்பாட்டுக்கே கையேந்தும் பல குடும்ப பெண்களை நாம் சந்திக்க முடிகின்றது" என்று தெரிவித்தார்.

"பொருளாதாரம் இன்மை, சுயதொழில் வசதி இன்மை, போசாக்கு இன்மை, அடிப்படை சுகாதார வசதி இன்மை, கல்வி வசதி இன்மை, போக்குவரத்து வசதி இன்மை, தங்குமிட வீடு கூட சரியான பாது காப்பற்ற நிலை, இவைகளுக்கும் மேலாக சுகாதார மான மலசலகூடம் இன்றிய நிலை, தண்ணீர் பிரச்சினை என பல்வேறு அவலங்களை பல்வேறு இடங்களில் முகங்கொடுக்க வேண்டி இருக்கிறது. கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும், சுட்டுக் கொல்லப்பட்டும் என்று போரின் இழப்புக்களால் பெருமளவான பெண்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகவே உள்ளன. இவர்களுக்கான சரியான நீண்டகால சுயதொழில் திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இதனால் பெண்கள் நிரந்தரமாகவே கையேந்தும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். இவ்வாறான சூழலில் மாற்றமும், முன்னேற்றமும் ஏற்பட வேண்டுமாயின் எமது வலிகளை நாமே வெளிப்படுத்தவும் அவற்றை நிவர்த்திக்கவும் அதிகாரங்களைப் பெற வேண்டும். அந்த அதிகாரத்துவமே பெண் பிரதிநிதித்துவம். அந்த வகையில் தான் நான் போட்டியிட முன் வந்தேன்" என்றார்.

பெரும்பாலும் இங்கு போட்டியிடுகின்ற ஒவ்வொரு பெண் வேட்பாளர்களும் தமது கட்சிக் கொள்கைகளுடன் பயணிக்கும் அதேவேளை பெண்களின் குரலாகவே பயணிக்கத் தொடங்கி யுள்ளனர். இவர்களது அரசியல் பிரவேசம் வெற்றி பெறவும் பெண்களுக்கான பிரதிநித்துவம் உறுதிப் படுத்தப்படவும் வேண்டும் என்ற வகையில் மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியம் வலுவூட்டல் விழிப்புணர்வு செயற்பாடுகளை செய்து வருகின்றது.

இது குறித்து ஒன்றியத் தலைவி மகாலட்சுமி குறிப்பிடுகையில், "அரசியல் மற்றும் பொதுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பெண்கள் மிகுந்த ஆர்வமாக உள்ளனர். ஆனால் அவர்களை சமூகத் தில் துணிந்து செயற்பட எமது சமூகத்தில் வேரூன்றி யுள்ள ஆணாதிக்க மனோபாவம் அவர்களை

## "ஒரு தேசத்தின் விடுதலை என்ற வகையில் பெண்களும் ஓர்அங்கம் என்ற நிலை உணரப்பட்டமை வரவேற்கத்தக்கது"

மிரட்டுகின்றது. இது அவர்களின் உள்மன சிந்தனை களிலும் புறநிலை சூழலிலும் நடக்கிறது. குறிப்பாக அவர்களின் தனிப்பட்ட கௌரவத்தினை பாதிக்கும் வகையில் அவதூறாக சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் புறநிலையாக முன்வைக்கப்படு கின்றன. அது அவர்களின் அகநிலையைப் பாதிக் கின்றது. கற்ற சமூகத்தில் உள்ள பெண்கள் கூட இந்த மனோபாவத்துக்கு பலியாகும் போது சாதாரண பெண்களை எப்படி நாம் புரிதலுக்கு உட்படுத்த முடியும். அந்தவகையில் சமூக விழிப்புணர்வு களை நாம் பல்வேறு ஊடகங்களூடாக ஏற்படுத்த வேண்டியவர்களாக உள்ளோம். இத்தேர்தலில் பல பெண்கள் போட்டியிடாமல் வெளியே நிற்பதற்கு அதுவும் காரணமாக உள்ளன.

மேலும் நாம் எமது ஒன்றியத்தின் ஊடாக எமது வலையமைப்புடன் இணைந்து மன்னார் மாவட் டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். கட்சி என்கிற பிரிவினைக்கு அப்பால் "அவளுக்கு ஒரு வாக்கு" என்ற கோரிக்கையை நாம் முன் வைத்துள்ளோம். எந்தக் கட்சி என்பதல்ல முக்கியம். இங்கு நீங்கள் யாருக்கு வாக்கு என்று தீர்மானிக் கும் செயற்பாட்டில் ஒரு பெண்ணுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற சிந்தனையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

அந்த வகையில் இந்த கொரோனா அச் சுறுத்தல் சூழலிலும் சுகாதார நடைமுறைகளை பேணும் வகையில் பல்வேறு அனுமதிகளையும் பெற்று இந்த செயற்திட்டத்தினை நாடகங்கள் ஊடாக வெளிப்படுத்தி பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்" என்றார்.

இந்த விழிப்புணர்வுப் பயணத்தில் யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டியங்கும் ஊடக பெண்கள் குழுவும் இணைந்து பயணித்து வரு கின்றது. பெண்களாகிய நாம் எமக்கான அங்கீகாரம், அதிகாரத்துவ உரிமை ஆகியவற்றுக்காக எமக்கான கொள்கையினை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் ஏமாற்றுக் கட்சிகளின் காலில் சிக்காமல் எமக்கான பெண் பிரதிநிதியை தெரிவு செய்ய பங்களிப்போம் என்று உறுதி கொள்வோமாக.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# ஒற்றுமையின் பெயரால் நாடகமாடும் தமிழ் அரசியல் தலைமைகள்

கொரோனா நோயைக் காரணம் காட்டி தமிழர் தாயகப் பிரதேசங்களை மேலும் இறுக்கமாக சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வந்திருக்கிறது சிறிலங்கா அரசு. எப்போதும் போலவே தென்னிலங்கை இயல்பாகவே இருக்கிறது. ஆனால் தமிழ் மக்கள் ஒரு கெடுபிடிப் போரை எதிர்கொண்டுள்ளனர். ஆலயங்களுக்கு செல்லவோ இறந்த எம் சொந்தங்களுக்கு நினைவேந்தல் செய்யவோ இயலாதவாறு கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடந்த பத்தாண்டுகளாக வழங்கப்பட்டு வந்த ஆதரவானது மக்கள் ஆணைக்கு மாறாக தமிழ்த் தேசிய நீக்கத்துக்கே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. போருக்குப் பின்னரான அந்த காலப்பகுதி என்பது தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமானது.

போரால் சிதைக்கப்பட்ட ஒரு இனம் தனது வாழ்வுரிமைக்காகவும், சுயகௌரவ மேம்பாட்டுக்காகவும், ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில் இழப்புகள், வலிகள், தியாகங்கள், ஒற்றுமை இந்தக் கோசங்களின் பெயரால் வாக்குகளைப் பெற்று ஏகபோக உரிமையை எடுத்துக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் கூட்டு உளவியலை சிதைத்து, அவர்களின் அரசியல் அபிலாசைகளை படுகுழிக்குள் தள்ளும் வேலையை தான் செய்தனர்.

தேர்தல் காலத்தில் மட்டும், கொள்கைப் பற்றுறுதியும் அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு விடுதலை இயக்கத்தின் புகழ் பாடி தாயகம், தேசியம், சுயநிர்ணயத்தை வரிக்கு வரி உச்சரித்து விடுதலை அரசியலை முன்னெடுப்பதாக காட்டிக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்னர், கொழும்பில் ஆளும் அரசுக்கு ஒருமுகமும், வாக்களித்த மக்களுக்கு இன்னொரு முகமும் காட்டும் சலுகை அரசியலே கடந்த பத்து வருட கால தமிழர் பிரதிநிதித்துவ அரசியலின் துயரம் தோய்ந்த வரலாறு.

இவர்களைப் போலவே தென்னிலங்கை கட்சிகளை சேர்ந்த தமிழ் வேட்பாளர்களும் சிறிலங்கா அரசு சார்ந்த தமிழ்க்கட்சி வேட்பாளர்களும் தேசியம், சுயநிர்ணயம் என்ற வார்த்தைகளை தமது பிரச்சாரங்களில் பயன்படுத்துவது நகைப்புக்கிடமானது. அதேவேளை இச்சொற்களின் கனதியை குறைக்கும் அவர்களின் இக்கேவலமான செயற்பாடுகள் வேதனை அளிக்கின்றன.

ரணில் - மைத்திரி கூட்டரசில் பிரதான பங்காளிகளாக அங்கத்துவம் வகித்த இவர்களால் அரசியல் கைதிகளின் விடுதலையைக் கூட சாத்தியமாக்க முடியவில்லை. காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிதல் உள்ளிட்ட விவகாரங்களில் கூடத் தீர்வைக் காண முடியவில்லை. நல்லாட்சி அரசுக்கு நெருக்கடிகள் வந்த போதெல்லாம் நிபந்தனை அற்ற ஆதரவை வழங்கி, அந்த ஆதரவுக்கு சன்மானமாக தமிழ் மக்களுக்கு எதையுமே இவர்கள் பெற்றுத் தரவில்லை என்பதே உண்மை.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படும் போதெல்லாம் எமக்கு குறைகள் இருந்தாலும் தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருந்து ஒரு அணியாக நாடாளுமன்றம் சென்றாலே எமது பலத்தை உலகுக்குக் காட்டலாம் என்று சொல்கிறார்கள். அதன் மூலமே அரசுடனும் சர்வதேசத்துடனும் பலமாக பேசலாம் என்பார்கள். இந்த ஒற்றுமை என்ற கோசத்தின் பின்னால் தமிழ் மக்கள் சென்று இழந்தது தான் அநேகம். ஆகவே இத்தேர்தலிலாவது ஒற்றுமை என்ற கோசத்தை விடுத்து கோட்பாட்டில் ஐக்கியத்தை காண முயல்வோம்.

தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கான உரிமையின் அவசியத்தை உணராத, அகிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களின் வலியை அறியாத, மக்களின் ஆன்மாவை படிக்காத, பதவி சலுகைகளுக்கு அடிபணிந்து விலை போகும் அரசியல் தலைமைகளை தான் நாங்கள் மறுபடியும் மறுபடியும் எமது பிரதிநிதிகளாக தெரிவு செய்யப் போகின்றோமா? அல்லது எம் மக்களின் உரிமைப் போராட்டங்களில் முன்னிற்கும், எந்தவித சலுகைகளுக்கும் அடிபணியாத, ஊழலற்ற அரசியல் பிரதிநிதிகளை தெரிவு செய்யப் போகின்றோமா?

நாம் தெரிவு செய்பவர்கள் எந்தக் கட்சியை சார்ந்தவர்கள் என்பது முக்கியமல்ல. எந்தக் கோட்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்பதே முக்கியம். கோட்பாடு சரியாக இருந்தால் கட்சி வேறுபாடுகளையும் தாண்டி அவர்கள் ஐக்கியப்படுவது வரலாற்று நியதி. ஆகவே அடுத்த ஐந்தாண்டுகளுக்கும் எமது இனத்தின் நீண்ட கால இருப்புக் குறித்தும் தீர்மானிக்க மக்கள் முடிவெடுக்கும் நேரம் இது.

- செ. கிரிசாந் -

# கோட்பாட்டு ஐக்கியமே தேவை



நாங்கள் ஒற்றுமையாக இல்லாவிட்டால் குலைந்து போய் விடுவோம் என்பது தோற்று விட்ட ஓர் இனத்தின் மனப்பயம் தான். இங்கே ஒற்றுமையாக இல்லாவிடில் குலைந்து போய் விடுவோம் என்றில்லை. எங்களுடைய நிலைப்பாடுகளில் நாங்கள் கவனமாகவும், தீர்க்கமாகவும் இல்லாவிடிற் தான் நாங்கள் குலைந்து போய் விடுவோம். போலியான ஒற்றுமைக் கோஷங்களில் ஒரு பிரயோசனமும் இல்லை. எல்லாவற்றையும் ஒரு தரப்பிடம் விட்டு விட்டு கடந்த பத்து வருடங்களில் என்னத்தை சாதித்தோம். இம்முறையும் அதே தரப்பை மாத்திரம் நாங்கள் திருப்பி அனுப்ப போகிறோமா? அல்லது அந்தத்தரப்பு எடுக்கக் கூடிய நிலைப்பாட்டை சவாலுக்கு உட்படுத்தக் கூடிய ஒரு தலைமையை நாங்கள் அனுப்பப் போகின்றோமா? அப்படி அனுப்புவதுதான் முக்கியம் என்று தான் தான் கருதுவதாக தெரிவித்தார் சட்டத்தரணியும், முன்னாள் யாழ். பல்கலை சட்டத்துறை முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி குமரவடிவேல் குருபரன்.

அவர் முக்கியமாக தெரிவித்த விடயங்கள் வருமாறு: தமிழ்த் தேசியவாத சிந்தனையை மூலதனமாக்கி அதனை தேர்தல் அறிக்கையாக்கி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுக் கொண்டு பின் அந்த அறிக்கைக்கும் எங்களின் அரசியலுக்கும் சம்பந்தமில்லாத மாதிரி கொழும்பிலும் வெளியிலும் நடந்து கொள்வது தான் என்னைப் பொறுத்த வரையிலும் கடந்த பத்து வருட கால தமிழரசியல் வரலாறு.

தேசியம், சுயநிர்ணயம், தாயகம் என்பதனை வாய்ப்பாட்டுச் சூத்திரங்கள் மாதிரி சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அவ்வளவு தான். பத்து வருடங்களாக எங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைக்கு அதற்கு மேல் அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் இல்லை.

தேசியம், சுயநிர்ணயம், தாயகம் என்பவற்றை ஓரமாக வைத்து விட்டு யதார்த்தபூர்வமான சிந்தனை முக்கியம் என்கிறார்கள். ஆகவே நீங்கள் அதனைத் தான் செய்யப் போகிறீர்கள் என்றால் ஏன் கொள்கை, கோட்பாடுகளை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்குகின்றீர்கள்? நாங்கள் யதார்த்த பூர்வமாக சிந்தித்து அந்தந்த நேரங்களில் என்னென்ன செய்ய வேணுமோ செய்து கொள்கிறோம் என்பதனை ஒரே வரியில் முடித்து விட்டுப் போகலாமே.

இடைக்கால வரைபு என்ற ஒன்றைக் கொண்டு வந்தீர்கள். நாங்கள் அதனை படித்துவிட்டு சொன்னோம், அதில் ஒன்றும் பெரிதாக இல்லை என்று. நீங்கள் இருக்கிறது என்றீர்கள். ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் நாங்கள் இடைக்கால வரைபை முன்னிறுத்தி அடுத்த ஐந்து வருடங்களுக்கு தொழிற்படுவோம் என்கிற வார்த்தையை உங்களால் போட முடியாமல் இருக்கிறது. "இன்னும் இறைமை தமிழ் மக்களிடம் இருக்கு" என்கிறீர்கள். ஆனால் இடைக்கால வரைபில் இறைமை அரசிடம் இருக்கிறது. சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக இருக்கக் கூடிய இலங்கை அரசிடம் இருக்கிறது என்பதனை ஏற்றுக் கொண்டு தான் வந்தீர்கள்.

அடிப்படையில் ஆயுதப் போராட்டம் அறமற்றது என்பது மாதிரியான கருத்துக்களை முன்வைக்கிறீர்கள். தமிழ்த் தேசியவாத சிந்தனை வளர்ச்சியடைந்த முக்கிய காலப்பகுதியை அப்படியே நீக்கம் செய்து வெளியில் தள்ளிப் போட்டு தமிழ்த் தேசியவாதம் பேசலாம் என்று நினைப்பதுவும், தமிழ்த் தேசிய வாதத்தை வெறுமனே வாய்ப்பாட்டு சூத்திரங்களாக வைத்திருப்பதும் எந்த வகையில் அறமாகும்.

மக்களுடைய நாளாந்த பிரச்சினைகளுக்கு தமிழ்த்தேசியவாத சிந்தனையை எவ்வாறு பதிலளிக்க வைக்கலாம் என்று நீங்கள் சிந்திக்கவில்லை. பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு கட்டமைப்பு ரீதியான, சமூக ரீதியான வேலைப்பாடுகள் ஒன்றையும் செய்யாது தேர்தல் நேரத்தில் நாங்கள் அப்படி செய்தோம் அபிவிருத்தி இப்படி செய்தோம் என்று பத்தாண்டுகளுக்கு பிறகு கூக்குரலிட்டுக் கொண் டிருப்பது தான் தொடர்கிறது.

இப்போது ஒரு ஜனாதிபதியும், பிரதமரும் வந்திருக்கிறார்கள். இவர்களை எப்படி கையாள்வது என்று ஒருவருக்கும் விளங்கவில்லை. அது தான் உண்மை. சஜித்துக்கும் தெரியாது. ரணிலுக்கும் தெரியாது. எங்களுடைய தமிழ்த் தலைமைகளுக்கும் தெரியாது.

பேரம் பேசுவது என்றால் எப்படி? எவ்வாறு பேரம்பேசலாம் எனில் எதிர்க்கட்சியும் அரசாங்கமும் கிட்டத்தட்ட அண்மித்த ஆசனங்களைப் பெற்றிருக் கையில் நீங்கள் பேரம் பேசலாம். மூன்றில் இரண்டு எடுக்கப் போகிறார்கள் என்று நீங்களே சொல் கின்றீர்கள். அப்படியானவர்கள் ஏன் எங்களுடன் பேரம் பேசப் போகின்றார்கள்? ரணில் அல்லது சஜித்கட்சி எதிர்க்கட்சி தலைவர் ஆவதற்கு நாங்கள் எங்கள் ஆசனங்களை வழங்கி ஆதரவு கொடுக் கலாம். இதற்கு நன்றாக பேரம்பேசலாம்.

கூட்டமைப்பு ஒருமித்த அணி ஒற்றுமையான அணி என்கிறார்கள். எப்படி அதனை வாய்கூசாமல் சொல்ல முடிகிறது? இந்த முறை அதிகமான அடி பாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் விருப்பு வாக்குகள் பெறுவதற்காக நடந்துள்ளது. இப்படியான அடிபாடுகளுக்கு மத்தியில் தமிழ் பொதுசன அபிப் பிராயத்தை தனி உடமையாக்கி ஒரு கட்சி மாத்திரம் அல்லது ஒரு நபர் மாத்திரம் சொல்வதற்கு விடப் போகிறோமா? அது தான் என் கேள்வி. அப்படி நாங்கள் விடுவோமாக இருந்தால், இவ்வளவு காலமும் நாங்கள் கட்டிக் காத்த அரசியல் விழு மியங்கள் எங்களுடைய போராட்ட வழி வந்த அரசியல் சிந்தனைக்கு இந்த தேர்தலுக்கு பின் இடமில்லாமல் போகும்.

மாற்று அணிகளில் நிறைய குறைபாடுகள் உள்ளது. நான் இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் நான் சொல்லக் கூடியது என்னவென் றால் இப்போது எங்களுடைய பிரதிநிதித்துவம்

# "ஒற்றைக் குரலாக தேசிய நீக்க அரசியலில் பயணிப்பதை தொடர்ந்தும் நாம் அனுமதிக்க முடியாது"

கொழும்பிலோ, வெளியிலோ எமது பிரச்சனை களைச் சொல்லக் கூடிய குரலாக இருத்தல் வேண்டும். இங்கு என்ன நடக்கிறது என்பதனை சொல்ல வேண்டும். அதற்கு முன்வைக்கப்பட வேண்டிய தீர்வு கள் என்ன என்பது தொடர்பில் தெளிவாக சொல்ல வேண்டும்.

இவை எல்லாவற்றையும் ஒரு தரப்பிடம் விட்டு விட்டு கடந்த பத்து வருடங்களில் என்னத்தை சாதித் தோம்? எமது அரசியலில் தொய்வு வந்திருக் கிறதா? நிலைப்பாட்டில் இருந்து சறுக்கி இருக்கி றோமா? இம்முறையும் அதே தரப்பை மாத்திரம் நாங்கள் திருப்பி அனுப்பப் போகிறோமா? அல்லது அந்த தரப்பு எடுக்கக் கூடிய நிலைப்பாட்டை சவாலுக்கு உட்படுத்தக் கூடிய ஒரு தலைமையை நாங்கள் அனுப்பப் போகின்றோமா? அப்படி அனுப்பு வதுதான் முக்கியம் என்று நான் நினைக்கிறேன்.

போலியான ஒற்றுமைக் கோஷங்களில் ஒரு பிரயோசனமும் இல்லை. தமிழ் மக்களின் அரசியல் சிந்தனை இது மாத்திரம் தான் அல்ல. தேர்தல் காலம் வேறு. ஐந்து வருட அரசியல் காலம் வேறு. மாற்றத் திற்கான தேவை அல்லது மாற்று அணி பல மடைவதற்கான தேவை என்னவென்று பார்த்தால் எங்களுடைய அரசியல் நிலைப்பாடு தொடர்பாக பல்வகைப்பட்ட குரல்கள் வெளிப்படுவது அவசியம். ஒற்றைக் குரலாக தேசிய நீக்க அரசியலில் பயணிப்பதை தொடர்ந்தும் நாம் அனுமதிக்க முடியாது.

தோற்ற இனத்தின் மனப்பயம் தான். நாங்கள் ஒற்றுமையாக இல்லாவிட்டால் குலைந்து போய் விடுவோம் என்று பயப்படுகிறோம். இங்கே ஒற்றுமையாக இல்லாவிடில் குலைந்து போய் விடுவோம் என்றில்லை. எங்களுடைய நிலைப் பாடுகளில் நாங்கள் கவனமாகவும், தீர்க்கமாக வும் இல்லாவிடில் தான் நாங்கள் குலைந்து போய் விடுவோம். அந்த அடிப்படையில் தான் நாங்கள் இந்த தேர்தலைப் பார்க்க வேண்டும்.

# அறமான அரசியலுக்குத் திரும்புவோம்




– சி.அ.யோதிலிங்கம் –

நாடாளுமன்றத் தேர்தல் விவகாரம் என்பது உண்மையில் வலுவாக சூடு பிடிக்கத் தொடங்கி யுள்ளது. தென்னிலங்கையை விட வடமாகாணத்தில் தான் சூடு அதிகமான தோற்றம் தெரிகின்றது. அதற்கு பிரதானமான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு உள்ளுக்குள் வந்த நெருக்கடிகளும் அதனால் மாற்றுத் தலைமை தோன்றுகின்ற நிலைமைகளும் தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வந்த நெருக்கடி என்னவென்று சொன்னால் இவ்வளவு காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக குற்றச் சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்தவர்கள் கூட்டமைப்புக்கு வெளியில் நின்ற சக்திகள் தான். வெளியே நின்ற கட்சிகள் அமைப்புக்கள், தனிநபர்கள் தான் விமர்சனங்களை வைத்தார்களே ஒழிய அவை கூட்டமைப்புக்கு உள்ளிருந்து வரவில்லை. ஆனால் இந்தத் தடவை தான் முதன்முதலாக கூட்டமைப்புக்குள் இணைந் திருக்கும் கட்சிகளிடமிருந்தே அந்த விமர்சனங் கள், குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளன. அவற்றுக்கும் மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரதான கட்சியாக இருக்கின்ற தமிழரசுக் கட்சிக்குள் இருந் தும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்கள் வந்திருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலம் என்பதே அது ஐக்கியமாக இருப்பது என்பது தான். அந்த ஐக்கியம் காரணமாக வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் இருக்கக் கூடிய ஒரு கட்சி என்பது தான் அதன் பலமாக இருந்தது. இன்று அது உடைந்து போய் விட்டது. இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாக இருப்பது மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியும் மாவை அணி, சுமந்திரன் அணி என இரண்டாகத் தான் உள்ளது. எல்லோரும் சேர்ந்து ஒரு பிரச் சாரத்தை முன்னெடுக்கக் கூடிய நிலைமை கூட அங்கே இல்லை. இம்முறை கடும் போட்டி இருப்பதால் தாங்கள் எப்படி தனித்து வெல்லலாம் என்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி வரும் நிலைமை தான் இங்கே காணப்படுகின்றது. இதனால் தமிழ் அரசியலும் சூடு பிடித்த ஒரு நிலைமை தான் காணப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு இன்று தேவை ஒருங் கிணைந்த அரசியலே. தமிழ் மக்கள் இரு வேறு முக்கிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரு கின்றனர். இன்று ஆட்சியில் இருப்பது பெருந்தேசிய வாதத்தின் இனவாத முகம். அதற்கு முகம் கொடுக்க வேண்டும். ஆட்சியில் இருக்கிறவர்கள் மட்டுமல்ல எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் இனவாத முகம் தான். இரண்டு இனவாத முகங்களும் சேர்ந்து இன்று சிங்கள தேசத்தை ஒரு பாசிச நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கின்றார்கள். முதலாவதாக இந்தப் பெரு நெருக்கடிக்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக முன்னெப்போதையும் விட இலங்கைத்தீவு சர்வதேச அரசியலோடு நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிகழ்ச்சி நிரல் போகும் இடமெல்லாம் இலங்கைத் தீவும் போக வேண்டும். ஆகவே பெருந்தேசிய வாதத்தின் இனவாத நிகழ்ச்சி நிரலுக்கு முகம் கொடுக்க வேண்டும். சர்வதேச அரசியலைக் கையாள வேண்டும். இது இரண்டையும் செய்வதென்றால் தமிழ்மக்கள் ஒரு பலமான நிலையில் இருக்க

வேண்டும். பலமான நிலையில் இருப்பதென்பது வெறுமனே தேர்தலில் வெற்றி பெறுவது மட்டுமல்ல. கொள்கை ரீதியாகவும், அரசியல் நிலைப்பாடு ரீதியாகவும், அரசியல் இலக்கு ரீதியாகவும், நிறுவனக் கட்டமைப்பு ரீதியாகவும், ஒரு பலமான நிலையில் இருப்பது தான் உண்மையில் பலமான நிலை என்பதனைக் குறிக்கும்.

பலமான நிலையில் இருப்பதென்று சொன்னால் இன்று எங்களுக்கு தேவை ஒருங்கிணைந்த அரசியல் தான். அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் ஒருங்கிணைந்த அரசியலை உடனடியாக கொண்டு வருவதற்கான சாத்தியங்கள் இல்லை. அதற்கான இடைக்கால கட்டத்தில் தான் நாங்கள் இப்போது நிற்கின்றோம். இந்த நேரத்தில் நாங்கள் செய்ய வேண்டியது, தமிழ்த் தேசிய அரசியலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவிழ்த்துக் கொட்டுவதனை எப்படி தடுத்து நிறுத்துவது என்பது தான்.

கவிழ்த்துக் கொட்டுவதனை தடுத்து நிறுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்கின்ற ஒரு கட்டமாகத் தான் இந்தக் கட்டத்தை நான் பார்க்கின்றேன். இந்த தேர்தலையும் அப்படித்தான் பார்க்கின்றேன். ஆகவே இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் கணிசமான ஆசனங்களைப் பெறுகின்ற போது தான் கூட்டமைப்பின் கவிழ்த்துக் கொட்டும் அரசியலை நிறுத்த முடியும். ஆகவே தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் மாற்று அணி கணிசமான ஆசனங்களைப் பெற வேண்டும். அந்தச் சூழல் இன்று உருவாகி இருக்கின்றது. அது தான் உண்மை. ஆகவே இந்த சூழலை வைத்துக் கொண்டு தேர்தல் முடிய அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிப்பவர்களாக நாம் இருக்க வேண்டும்.

தேர்தல் முடிவின் பின்னர் ஒருவித சமநிலை அரசியல் தான் கட்சிகளைப் பொறுத்தவரைக்கும் காணப்படும். ஆகவே இந்த நேரத்தில் வலுவான சிவில் சமூகத் தளத்தை உருவாக்கி சிவில் சமூக தளத்தினூடாக இந்த அரசியற் கட்சிகளுக்கு அழுத்தத்தைக் கொடுத்து அரசியற் கட்சிகளை ஒரு ஐக்கிய முன்னணிக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நாங்கள் செய்ய வேண்டும்.

அரசியல் கட்சிகள் என்பது எப்போதும் தேர்தல் அரசியலோடு தான் நிற்கும். தேர்தல் அரசியல் என்பது கதிரை அரசியல், பதவி அரசியல் தான். அது தமிழ்த் தேசிய வேலைத் திட்டத்தை வினைத்திறனுடன் கொண்டு போக மாட்டாது. வேலைத் திட்டங்களை சரியான முறையில் செய்வதற்கான கால அவகாசங்கள் நேரங்கள் கூட அவைக்கு கிடைக்கப் போவதில்லை. நாடாளுமன்ற அரசியல் என்பது தேசிய நிர்மாண வேலைத்திட்டங்களுக்கு எதிரான அரசியல் தான். அது ஒரு எல்லைக்கு அப்பால் போகாது.

ஆகவே தமிழ்த் தேசிய அரசியலை நகர்த்துகின்ற பொறுப்பை இந்த அரசியல் கட்சிகளிடம் மட்டும் நாங்கள் கொடுக்க முடியாது. அதற்கு புறம்பாக கட்சியரசியலுக்கு அப்பாலான ஒரு தேசியத் தளத்தை உருவாக்க வேண்டும். மக்கள் அமைப்புக்களை உருவாக்கி அந்த மக்கள் அமைப்புகளின் ஐக்கிய முன்னணியையும் உருவாக்க வேண்டும். மக்கள் அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் இணைத்ததான ஒரு தேசிய அரசியல் இயக்கத்தை நாங்கள் உருவாக்குவோம். அதனை உருவாக்குவதன் மூலம் தான் எங்களால் முன்னேறிச் செல்ல முடியும்.

தமிழ்மக்கள் எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனம். அது தனித்து மாத்திரம் இந்தப் போராட்டங்களை நடாத்த முடியாது. அதன் அக ஆற்றல் மட்டும் அதற்குப் போதாது. தன்னுடைய புற ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். மலையகத்

**“இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் கணிசமான ஆசனங்களைப் பெறுகின்ற போது தான் கூட்டமைப்பின் கவிழ்த்துக் கொட்டும் அரசியலை நிறுத்த முடியும். ஆகவே தமிழ்த் தேச அரசியலை முன்னெடுக்கும் மாற்று அணி கணிசமான ஆசனங்களைப் பெற வேண்டும்”**

தமிழர்கள், உலகத்தமிழர்கள் எல்லாம் புற ஆற்றலை கொடுக்கக் கூடிய சக்திகள். சர்வதேச முற்போக்கு ஜனநாயக சக்திகள் எல்லாம் நல்ல நட்பு சக்திகள். அதற்குள் சிங்கள முற்போக்கு சக்திகளும் அடக்கம். ஆகவே அடிப்படை சக்திகளாக இருக்கக் கூடிய தாயக மக்களும் அதன் நீட்சியாக இருக்கக் கூடிய புலம் பெயர் மக்களோடு இந்த சேமிப்பு சக்திகளையும் நட்பு சக்திகளுடன் இணைத்து பெரும் குடைக்குள் அணி திரட்டிக் கொண்டு ஒரு அணியாக நாங்கள் நகர வேண்டும். அப்போது தான் தமிழரசியலை முன்னோக்கி நகர்த்தக் கூடிய ஒரு செயற்பாட்டை எங்களால் செய்யக் கூடியதாக இருக்கும். நாங்கள் புதிய அரசியலை நோக்கி நகர வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம் என்றே நான் நினைக்கின்றேன்.

**அறமில்லாத அரசியலை நோக்கி இளைஞர்கள் கவரப்பட மாட்டார்கள்**

நாங்கள் நடத்துவது ஒரு போராட்ட அரசியல் என்பதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். போராட்ட அரசியலில் எப்போதும் சுகபோகங்களுக்காக வருகின்ற அரசியல்வாதிகளை ஒதுக்க வேண்டும். அவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அந்தப் போராட்ட அரசியலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று சொன்னால் இளைஞர்களாக இருக்கின்றவர்களுக்கு நாங்கள் வலுவான முன்னுரிமையைக் கொடுக்க வேண்டும். வயது முதிர்ந்தவர்கள் இளையோருக்கான ஆலோசனையை வழங்கலாம். அவர்களே தாங்கள் தடி பிடித்துக் கொண்டு நடக்கின்ற நேரத்திலும் அரசியல் தலைவர்களாக வர வேண்டும் என நினைத்துப் பார்க்கக் கூடாது.

புதியவர்களுக்கு நாங்கள் வழி விட வேண்டும். பேராசிரியர் சிவத்தம்பி அடிக்கடி சொல்லுவார். “எங்களை விட புதிய தலைமுறை விடயங்களை வலுவாக பார்க்கும். வலுவாக சிந்திக்கும். ஏனென்றால் அவர்கள் எங்கள் தோள் மீது ஏறி நின்று உலகத்தைப் பார்க்கின்றார்கள். புதியவர்கள் வலுவாகப் பார்ப்பார்கள். ஆகவே அவர்களுக்குரிய சூழலை நாங்கள் வலுவாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.”

இன்றுள்ள கவலை என்னவெனில், அரசியலில் ஈடுபடுவதென்றால் எல்லோரும் கேட்பது தேர்தலில் நிற்பதைத் தான். அரசியலுக்கு வருபவர்களில் பெரும் பகுதியினர் உழைத்துக் கொண்டு போகவே வருகின்றார்கள். அரசியலுக்கு வருவது என்பது சொகுசு வாழ்க்கைக்கு வருகின்றமை என நினைக்கும் நிலைமை உள்ளது. இந்த நிலைமைகளை எல்லாம் நாங்கள் மாற்ற வேண்டும். தேர்தல் அரசியலுக்கு அப்பாலும் அரசியல் உள்ளது. இன்று தேர்தல் பிரச்சார கூட்டங்களுக்கு 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் அதிகம் வருகின்ற நிலைமை உள்ளது. இளைஞர்களை பெரிதாக காண முடியாமல் உள்ளது.

> **“அறமில்லாத அரசியலை நோக்கி இளைஞர்கள் கவரப்பட மாட்டார்கள். ஆகவே அறத்துடன் கூடிய ஒரு அரசியலை நாங்கள் நகர்த்துகின்ற போது இளைஞர்களையும் நாங்கள் கவரக் கூடியதாக இருக்கும்”**

அறமில்லாத அரசியலை நோக்கி இளைஞர்கள் கவரப்பட மாட்டார்கள். ஆகவே அறத்துடன் கூடிய ஒரு அரசியலை நாங்கள் நகர்த்துகின்ற போது இளைஞர்களையும் நாங்கள் கவரக் கூடியதாகஇருக்கும். வலுவூட்டிஅவர்களைமுன்னுக்கு கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும். இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானது என நான் நினைக்கிறன்.

இன்று நிலத்தை, மொழியை, கலாச்சாரத்தை, பொருளாதாரத்தை பாதுகாப்பதற்கான அரசியலும் ஒரு வகையில் தேசிய அரசியல் தான். எங்களுடைய குழந்தைகள், சிறார்களை பக்குவமாக வளர்த்தெடுப்பதும் ஒரு வகையில் தேசிய அரசியல் தான். தமிழ்த் தேசியத்தை வாழ்வு முறையாக கடைப்பிடிக்கின்ற போது தான் எங்களால் முன்னோக்கி நகரக் கூடியதாக இருக்கும்.

# சமஷ்டிக் கட்டமைப்பு சரியான வகையில் இருந்தால் பிரிவினைவாதம் வராது



**"சமஷ்டிக் கட்டமைப்பு என்பது தமிழ் மக்கள் கௌரவத்தோடும் சுயமரியாதையோடும், அடக்குமுறை இன்றி நிம்மதியாக வாழக் கூடிய ஒரு தீர்வு"**

**- துருவன் -**

இம்முறை இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் நம்பிக்கை அளிக்கக் கூடிய சில இளம் வேட்பாளர்கள் களமிறங்கி உள்ளனர். அதிலும் கொள்கையில் தெளிவு, மக்களுடன் இறங்கி பயணிக்கும் ஆற்றல் கொண்டவர்களில் முதன்மையானவர் மணிவண்ணன்.

அவருடன் பேசியதில் இருந்து முக்கியமான விடயங்கள் வருமாறு: நாடாளுமன்றத்துக்கு போவதனை பதவியாகவோ வரப்பிரசாதமாகவோ நான் கருதவில்லை. தப்பித்தவறி நாடாளுமன்ற உறுப்பினரானால் அது என் மீது சுமத்தப்பட்ட பெரும் பொறுப்பாகத் தான் நான் பார்க்கிறேன். மக்கள் எங்கள் மீது வைக்கின்ற நம்பிக்கையாகத் தான் நான் பார்க்கின்றேன். அந்த நம்பிக்கையை தகர்க்கின்ற மாதிரி நாங்கள் ஒரு நாளும் செயற்பட மாட்டோம். அது எங்களின் மனச்சாட்சிக்கு ஒவ்வாது. நான் அவ்வாறு ஒருவனாக இருந்திருந்தால் பதவி தான் தேவையென நினைத்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே இருந்திருப்பேன். ஒரு அரசியற் தீர்வு என்று வரும் போது அது மக்கள் வாக்கெடுப்பைக் கோருவதனூடாக நடக்க வேண்டும். அரசியலமைப்பு தீர்வு என்றால் அது நாடாளுமன்றத்திற் தான் நிறைவேற்றப்பட வேண்டும். அரசியலமைப்பு மாற்றத்துக்கு ஊடாக தீர்வுத்திட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

அரசியலமைப்பு மாற்றப்படுகின்ற போது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் மக்களாணையும் வேண்டும் என்று இப்போது இருக்கின்ற அரசியலமைப்பு சொல்கிறது. ஆகவே ஒரு தீர்வுத்திட்டம் கொண்டு வரப்படுமாக இருந்தால் சட்டப்படி மக்களாணை வர வேண்டும். ஆகவே எங்கள் மக்களிடம் நாங்கள் ஆணை கோருவோம்.

எங்களைப் பொறுத்தவரையில் சமஷ்டி ஆட்சி முறையில் இலங்கையில் வாழ முடியும் என்கிற நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகள் கூட பேச்சுவார்த்தை மேசைகளில் சமஷ்டிக் கட்டமைப்பை பெற்றுக் கொள்ளும் விதமாகவே பேச்சுக்களை முன்னெடுத்து வந்தார்கள்.

சமஷ்டிக் கட்டமைப்பு என்பது தமிழ் மக்கள் கௌரவத்தோடும் சுயமரியாதையோடும், அடக்குமுறை இன்றி நிம்மதியாக வாழக் கூடிய ஒரு தீர்வு. எனவே அவ்வாறான ஒரு தீர்வுத் திட்டத்தை தான் நாங்களும் கோருகின்றோம். அது தனிநாடு அல்ல. அவ்வாறான ஒரு தீர்வுத் திட்டம் என்பது நாடாளுமன்றுக்குள்ளால் கொண்டு வரப்பட வேண்டும். நாடாளுமன்றுக்குள்ளால் கொண்டு வரப்பட வேண்டுமாக இருந்தால் 2/3 பெரும்பான்மை அரசியலமைப்பை மாற்றுவதற்கு வேண்டும். மக்கள் வாக்கெடுப்பும் வேண்டும். அது இலங்கை முழுவதற்குமான மக்கள் வாக்கெடுப்பு. அரசியலமைப்பு மாற்றத்துக்கான முயற்சியில் உறுதியுடன் போராடுவோம்.

**யதார்த்த அணுகுமுறை**

கொள்கையில் உறுதியாக இருந்தால் யதார்த்தமாக இல்லை என்று சொல்ல முடியாது. நாங்கள் யதார்த்தத்தை தான் பேசுகின்றோம். சிலபேர் சொல்கிறார்கள் நடைமுறைச் சாத்தியம் இல்லை என்று. எனக்கு அது விளங்கவில்லை. நடைமுறைச் சாத்தியமான தீர்வு என்ன என்று யார் வரையறை செய்துள்ளார்கள்.

எது எங்களுக்கு தேவை? எதை நாங்கள் அடைந்தால் எங்கள் இனப்பிரச்சினை தீரும்? என்பதனை நாங்கள் யதார்த்தமாக சிந்திக்கின்றோம். எங்களுக்கு என்ன பிரச்சினை என்பதனை நாங்கள் அடையாளப்படுத்தினோம். அந்தப் பிரச்சினையை தீர்ப்பதென்றால் எப்படியான தீர்வுத் திட்டம் வர வேண்டும் என அடையாளப்படுத்தினோம். அந்த தீர்வுத்திட்டம் திரும்ப பறிபோகக் கூடாது என்றால் எப்படியான கட்டமைப்பு வைத்திருக்க வேண்டும்? இன்று தீர்வைத் தந்துவிட்டு நாளைக்கு எங்கள் சம்மதமில்லாமல் பிடுங்கி எடுக்கக் கூடாது என்றால் எவ்வாறான பொறிமுறைகளை நாங்கள் அரசியலமைப்புக்குள் கொண்டுவர வேண்டும் என யோசித்தோம். அப்படி யோசித்து உருவாகியது தான் தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட தீர்வுத் திட்டம். அது முழுக்க முழுக்க எங்கள் பின்புலத்தில் உருவாக்கப்பட்ட விடயம்.

அந்த தீர்வுத் திட்டம் பல யதார்த்தங்களை உள்வாங்கியிருக்கிறது. என்னென்ன விதத்தில் நாங்கள் அழிக்கப்பட்டோம், என்னனென்ன விதத்தில் நாங்கள் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்பட்டோம், எவ்வாறு இன அழிப்புக்கு உள்ளானோம், இவைகளை தடுப்பது என்றால் என்னென்ன செய்ய வேண்டும் என்று அந்த தீர்வுத்திட்டம் சொல்கிறது. உதாரணத்துக்கு இன்று கொடுக்கப்படும் தீர்வு நாளை வரும் அரசாங்கத்தால் பறிக்கப்படக் கூடாது.

ஜம்முகாஷ்மீருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு மோடியால் பறிக்கப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலைமை எங்களுக்கு வரக் கூடாது. அவ்வாறான நிலைமை வராமற் பாதுகாக்கக் கூடிய அரசியலமைப்பு பொறிமுறையை உருவாக்க வேண்டும் என யோசித்தோம். அப்படி யோசித்து யதார்த்தமான தீர்வுத்திட்டத்தை வைத்திருக்கிறோம். அதனால் தான் நாங்கள் யதார்த்தவாதியாக இருக்கின்றோம்.

### சமஷ்டிக் கட்டமைப்பின் அவசியம்

13 ஆவது திருத்தத்தை விட நிறைய பாதகமான அம்சங்கள் இடைக்கால அறிக்கையில் இருக்கின்றன. இந்த ஒற்றையாட்சிக்காக, 13 ஆவது திருத்தத்தை விட பாதகமான மாற்றத்துக்காக நாங்கள் போராடவில்லை. இப்போது உள்ள ஒற்றையாட்சியை நாங்கள் சமஷ்டியாக மாற்ற வேண்டும். பல்வேறு இனக்குழுமங்கள் வாழும் பன்மைத்துவம்

## "ஜம்முகாஷ்மீருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு மோடியால் பறிக்கப் படுகின்றது. அவ்வாறான ஒரு நிலைமை எங்களுக்கு வரக் கூடாது"

மிக்க நாட்டிலே பொருத்தமான அரசியலமைப்பு என்பது சமஷ்டி தான். சமஷ்டிக் கட்டமைப்பு இருக்கின்ற நாடுகள் தான் இன்று அபிவிருத்தியடைந்து கொண்டு போகின்றன.

இனப்பன்மைத்துவம் இருந்தும் ஒற்றையாட்சி இருக்கின்ற நாடுகள் தங்களுக்குள் முரண்பட்டு அடிபட்டுக் கொண்டு அழிந்து கொண்டு இருக்கின்றன. அமெரிக்காவில், இங்கிலாந்தில் சமஷ்டி ஆட்சி முறையே இருக்கின்றது. பல்வேறு இராச்சியங்களின் கூட்டு தான் ஐக்கிய இராச்சியம் என அழைக்கப்படும் இங்கிலாந்து. பல்வேறு மாநிலங்களின் கூட்டு தான் ஐக்கிய அமெரிக்க நாடுகள் என அழைக்கப்படும் அமெரிக்கா. ஜெர்மன், சுவிற்சர்லாந்து உட்பட பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளும் அவ்வாறே இயங்குகின்றன.

இனங்களுக்கிடையேயான அரசியற் பிரச்சனைகள் இல்லாமையாற்தான் அந்நாடுகளால் பொருளாதாரப் பிரச்சனையில் முழுக்கவனத்தையும் செலுத்தக்கூடியதாக உள்ளது. பொருளாதார ரீதியில் முன்னேறக் கூடியதாக உள்ளது. இலங்கையும் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டுமாக இருந்தால் எங்களது அரசியல் கட்டமைப்பில் மாற்றங்களை கொண்டு வந்து சமஷ்டியாக மாற்ற வேண்டும் என்பது தான் நிலை.

பிராந்தியங்களுக்கு அதிகாரம் மிக்க வலுவான சமஷ்டிக் கட்டமைப்பு இருக்கின்ற நாடுகளிலே ஒருவித போக்கு இருக்கிறது. அவை மெல்ல மெல்ல மத்தியை நோக்கி கூட்டாகிக் கொண்டு போகின்றன. அது சமஷ்டி பற்றிய அதீத புரிதலால் வருகிறது. தாங்கள் தனியாக நிறைய அதிகாரங்களை அனுபவித்து தங்களுக்குள் எந்த பாகுபாடும் இல்லாத நிலையில் மெல்ல மெல்ல அவர்கள் கூட்டாகின்றார்கள். சமஷ்டிக் கட்டமைப்பு சரியான வகையில் இருந்தால் பிரிவினைவாதம் வராது.



# மாவீரன் பண்டார வன்னியனும் அவரின் திரிபுபடுத்தப்பட்ட வரலாறும்

நெடுங்கேணி சானுஜன்
வரலாற்றுத்துறை சிறப்பு மாணவன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

தாய்மண் மீது அடங்காப்பற்றுக் கொண்டு இறுதிவரை போராடியவன் பண்டாரவன்னியன். ஒருநாட்டில் ஓர் இனத்தின் வரலாற்றுப் பாதைகளைப் புரட்டினால் அதில் பல்வேறு உணர்வுகள் வெளிப் படுத்தப்படுவதினை எவராலும் மறுக்க முடியாது. அதுவும் இலங்கைத்தீவில் தமிழினத்தின் வரலாறுகள், துன்பங்கள், துயரங்கள் நிறைந்திருந்தாலும் அவை வீரஞ்செறிந்தவை.

அனுராதபுர இராசதானியில் நீதி தவறாமல் 44 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த மனுநீதிச் சோழன் என அழைக்கப்படும் எல்லாளன் வரலாறு, யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலியனின் வரலாறு, வன்னியை ஆண்ட மாவீரன் பண்டார வன்னியன் வரலாறு என்பன உயர்ந்தவை. இவர்களின் வரலாற்றை மீட்டுப் பார்த்தால் அதில் பல புனிதத் தன்மைகள் புலப்படுகின்றன.

இலங்கையில் புராதன காலத்தில் காணப்பட்ட இராச்சியங்களில் அடங்காப்பற்று எனப்படும் வன்னி இராச்சிய வரலாறுகள் வித்தியாசமானவை. இலங்கை வடபகுதியில் வடக்கே ஆனையிறவுப் பரவைக் கடலையும், கிழக்கே முல்லைத்தீவுக் கடலையும், தெற்கே நுவரகலாவாவியையும், மேற்கே மன்னார் கடலையும் எல்லைகளாகக் கொண்ட பிரதேசமே அடங்காப்பற்று எனப்படும் வன்னியாகும்.

இந்த வன்னிப் பிரதேசத்தில் புராதன காலத்தில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்றாக பல கிறிஸ்துவுக்கு முற்பட்ட தமிழ் பிராமிச்சாசனங்களும் மற்றும் பல தொல்லியல் சான்றுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த பூர்வீகக்குடிகள் சுதந்திரமாக இருந்தனர். **புவியியல் அமைப்பு, சூழல், சமூக வாழ்க்கை முறை காரணமாக அவர்கள் யாருக்கும் அடிபணியாமல் இருந்தனர்.** யாழ்ப்பாண ஆட்சியினருக்கோ, சிங்கள ஆட்சியினருக்கோ அடங்காமல் இருந்த பிரதேசம் என்பதால் இப்பகுதி "அடங்காப்பற்று" எனப்பெயர் பெற்றது.

இவ்வாறாகச் சிறப்புப் பெற்ற அடங்காப்பற்று எனப்படும் வன்னி இராச்சியத்தை ஆரம்பத்தில் ஆட்சி புரிந்த வன்னியர்கள் பனங்காமத்தைத் தமது தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பின்பு முல்லைத்தீவைப் பிரதான தலைமைப்பீடமாக இடம்மாற்றிக் கொண்டனர். இந்த வன்னி இராச்சி யத்தை இரண்டு வகையானவர்கள் ஆட்சி புரிந்த தாகக் கூறப்படுகின்றது. வன்னியர்கள் எனப்படு வோரும் மற்றும் மாப்பாணர்கள் எனப்படுவோரும் ஆட்சி புரிந்தனர்.

இவ்வாறான சூழ்நிலைகளில் கி.பி. 1505 ஆம் ஆண்டு இலங்கைக்குள் நுழைந்த போர்த்துக் கேய இனத்தவர்களால் வன்னியின் செட்டிக்குளம்

மற்றும் மன்னார் போன்ற பிரதேசங்கள் கைப்பற்றப் பட்டன. இதன் பின்பு கி.பி. 1782 ஆம் ஆண்டு ஜூலை மாதம் லெப்ரினன் நாகெல பொது மன்னிப்பளித்த போது சின்னநாச்சி என்பவருக்கும் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டது.

முல்லைத்தீவிற்கு திரும்பிச் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டார். இந்தப் பின்னணியை வைத்துப் பார்க்கும் போது பண்டாரவன்னியனின் தாயின் பெயர் சின்னநாச்சியாக இருந்திருக்கலாம்.

சுவாமி ஞானப்பிரகாசரின் பரம்பரைக் குறிப்பின்படி குழந்தை நாச்சனுடைய மகன் பண்டார வன்னியன் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாகத் தான் பண்டாரவன்னியனின் ஆள்புலம் முல்லைத்தீவு, வட்டுவாகல், முள்ளியவளை, ஒட்டுசுட்டான் போன்ற பிரதேசங்களாக இருந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் கி.பி. 1796 ஆம் ஆண்டு இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமாகின்றது. ஆங்கிலேயர்கள் கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியங்களை இலகுவாகக் கைப்பற்றிக் கொண்டனர். ஆயினும் கி.பி. 1800 ஆம் ஆண்டு பனங்காமத்தில் பண்டார வன்னியனின் படைப்பிரிவு ஒன்று இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

பண்டாரவன்னியன் வன்னியில் கலகங்கள் செய்ததன் காரணமாக ஒல்லாந்தரினால் பதவிநீக்கம் செய்யப்பட்டுப் பின்னர் ஆங்கிலேயர்களின் மன்னிப்பின் பேரில் வன்னியில் ஒரு சிறு பிரிவிற்குத் தலைவனாக நியமிக்கப்பட்டிருந்தான்.

ஆனால் ஆங்கிலேயர்களைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றப் போவதாகச் சபதம் செய்து மீண்டும் கலகங்கள் செய்ய பண்டாரவன்னியன் ஆரம்பித்தான்.

பண்டாரவன்னியன் பாரிய படையெடுப்பினை மேற்கொண்டு வன்னி வடபகுதி முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததுடன் முல்லைத்தீவையும் கைப்பற்றினான். மேலும் அவனது படையினர் கொட்டியாரத்தையும் கைப்பற்றினர். பண்டார வன்னியன் அங்கும் தனது படைவீரர்கள் சிலரை நிலை கொள்ளச் செய்தான். ஆயினும் குறுகிய காலப்பகுதியில் ஆங்கிலேயர்கள் மீளவும் இதனைக் கைப்பற்றியதாக ஆங்கிலகுறிப்புக்கள் கூறுகின்றன.

இவ்வாறான சூழ்நிலைகளில் பண்டாரவன்னியன் கி.பி 1803 ஆம் ஆண்டு கற்சிலைமடுவில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதனை நன்கு அறிந்த ஆங்கிலேயத் தளபதி கப்டன் வொன் டிறிபேர்க்கின் தலைமையிலான ஆங்கிலப்படைகள் கி.பி. 1803 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி அதிகாலை 05 மணியளவில் ஒரு படையெடுப்பை மேற்கொண்டன.

மன்னாரிலிருந்து துணுக்காய் சென்ற வொன் டிறிபேக் பண்டார வன்னியன் தங்கியிருந்த கற்சிலைமடுவில் அதிரடித்தாக்குதலை மேற்கொள்கின்றான். இதனால் பலர் கொல்லப்பட 46 பேர் கைது செய்யப்பட்டனர். 16 வீடுகளில் இருந்த பண்டாரத்தின் சொத்துக்கள் எரிக்கப்பட்டன.

ஒன்றரை இறாத்தல் குண்டுகள் போடக் கூடிய கண்டி இராசதானியின் முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கித்துப்பாக்கி, 55 ஆயுதந்தாங்கிகள், பன்னிரண்டு ஈட்டிகள், இரண்டு வாள்கள், இரண்டு கிறிஸ் கத்திகள், ஒரு துப்பாக்கி வாய்ச்சரிகை, ஒரு துப்பாக்கிக்குழாய், இரண்டு கூடை துப்பாக்கிரவைகள் போன்றவற்றை ஆங்கிலப்படைகள் கைப்பற்றினர்.

இதனால் பண்டாரவன்னியன் தனது இருப்பிடமான பண்டார இலுப்பைக்குளத்திற்கு தப்பி

**"புவியியல் அமைப்பு, சூழல், சமூக வாழ்க்கை முறை காரணமாக அவர்கள் யாருக்கும் அடிபணியாமல் இருந்தனர்"**

யோடினார். இதன் நினைவாக வொன் டிறிபேக்கின் தினக் குறிப்பிலிருந்த தகவலைப் பார்க்கலாம். 1904 – 1905 இல் முல்லைத்தீவுப் பிரிவிற்கு உதவி அரசாங்க அதிபராக ஆர்.ஏ.ஜி.வெஸ்ரிங் என்பவர் இருந்தார். கி.பி 1803 இல் பண்டார வன்னியனை கற்சிலை மடுவில் வொன் டிறிபேர்க் தோற்கடித்ததை உறுதிப்படுத்த கி.பி 1904 இல் அதாவது சுமார் நூறு வருடங்களின் பின்னர் ஒரு நடுகல்லை அமைத்தார்.

இந்தக் கல்லிலே "HERE ABOUTS CAPTAIN VON DRIEBERG DEFEATED PANDARAVAWNIYAN 31 ST OCTOBER 1803" என்று பொறிக்கப்பட்டுள்ளது. தப்பியோடிய பண்டார வன்னியன் கி.பி 1811 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயப்படைகளைத் தாக்கும் திட்டத்துடன் நடமாடினான் என கதிர்காமநாயக்க முதலி ஆளுநர் ரேணருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். இவரே பண்டாரவன்னியனின் நடவடிக்கைகளை ஆங்கிலேயருக்கு தெரியப்படுத்தியவராவார். மாறாக காக்கை வன்னியன் அல்ல. எனவே பண்டார வன்னியன் பெரும்மன்னனாக இல்லாது சாதாரண படைத்தளபதியாக கிளர்ச்சியாளனாகவே செயற் பட்டிருக்கின்றான்.

ஆனால் வரலாற்றில் இல்லாத பளைப் பகுதியில் கி.பி 1901 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த பண்டாரம் வைரமுத்து என்கின்ற பெயரை வைத்துக் கொண்டு அவர் தான் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் என்று முல்லைமணி அவர்கள் கற்பனையாக காவியம் புனைந்தார். அதுவே இன்று வரலாறாகி நிலைக்க உண்மை வரலாறு மங்கியே விட்டது. பண்டாரவன்னியனுடைய வரலாறு எவ்வளவு தூரத்துக்கு திரிபுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை இதன் மூலம் காணமுடிகிறது.

வெறும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்வாழ்ந்த பண்டார வன்னியனது வரலாற்றிலேயே இவ்வளவு திரிபு என்றால் மகாவம்சம் முதலான வரலாற்று நூல்களில் எவ்வளவு திரிபு இருக்கும் என எண்ணிப் பார்க்க வேண்டியதில்லை. வரலாறு என்பது ஒரு இனத்தின் காலத்தைக் காட்டும் கண்ணாடி. எனவே வருங்காலத்திலாவது வரலாற்றுத் திரிபில்லாது வரலாற்றுண்மைகளைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதே எல்லோரது ஆசையாகும்.

வன்னிக்குள் முதலில் வெற்றிகரமாக நுழைந்தவர்கள் டச்சுக்காரர்கள் என நாம் குறிப்பிடும் ஒல்லாந்தர்கள். 1782 இல் வன்னியை கைப்பற்ற அவர்கள் நடத்திய போர் பற்றி எழுதும் லூயி என்ற வரலாற்று ஆசிரியர் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார். "ஒல்லாந்தர்கள் எத்தனையோ நாடு களில் போர் நடத்தியிருக்கிறார்கள். ஆனால் இப்படி வீரத்துடன் போரிட்டவர்களை உலகில் எங்கும் அவர்கள் காணவில்லை" என்று. ஒல்லாந்தர் காலத்திலும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தும் மன்னார், திருகோணமலை வன்னிக் காடுகள் என வன்னியர்கள் இடைவிடா கொரில்லா போர் நடத்தி வந்தனர். அவர்கள் மத்தியில் ஒளி விடும் மாணிக்கமாய் வாழ்ந்தவர்களில் ஒருவர் தான் மாவீரன் பண்டார வன்னியன். ●

---

**வாசகர்களே!**

*நிமிர்வு இதழை* **www.nimirvu.org** *இணையமூடாகவும் சமூக ஊடகப் பக்கங்களான* **facebook.com/nimirvu** *என்ற முகநூல் ஊடாகவும்* **youtube.com** *இல்* **nimirvu** *என்று தேடுவதனூடகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.*

*இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம்* **(noolaham.org)** *இணையத்தினூடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல்* **(pdf)** *வடிவில் வாசிக்க முடியும்.*

**-ஆசிரியர்-**

# தமிழ் மக்கள் சிறுபான்மை இனமல்ல தேசிய இனம்



தமிழ்மக்களை தமிழ்அரசியல்வாதிகளில் பலர் கூட சிறுபான்மை இனம் என்றே விழிக்கும் நிலை காணப்படுகின்றது. சம்பந்தன் ஐயா கூட பல இடங்களில் சிறுபான்மை இனம் என சொல்லிக் கொண்டு வந்தார். உண்மையிலே தமிழ்மக்களை ஒரு சிறுபான்மை இனமாக கொள்வதா அல்லது தேசிய இனமாக கொள்வதா என்கிற விவகாரம் 70 களிலேயே தீர்க்கப்பட்ட விவகாரம். என நிமிவுக்கு கருத்து தெரிவித்தார் அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம்.

அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்த விடயங்கள் வருமாறு: யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த அரசியல் கூட்டமொன்றில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜதுரை அவர்கள் பேசும் போது "தமிழ்மக்கள் ஒரு சிறுபான்மை இனம். அவர்கள் உரிமைக்காக போராடுகின்றார்கள்" என்று குறிப்பிட்டார். அதற்கடுத்து பேசியவர் அன்றைக்கு தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியஸ்தராக இருந்த வரதராஜப் பெருமாள். அவர் பேசும் போது "அண்ணன் ராஜதுரை அவர்கள் கூறுவது தவறு. தமிழ்மக்கள் சிறுபான்மையினம் அல்ல. தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம். தமிழ்மக்கள் உரிமைக்காக போராடவில்லை. அவர்கள் தங்கள் விடுதலைக்காக போராடுகின்றார்கள்" என்று குறிப்பிட்டார். அதற்குப்பிறகு அமிர்தலிங்கம் பேசினார். "தம்பி வரதன் சொல்வது தான் சரி. தமிழ்மக்கள் சிறுபான்மையினமல்ல. தேசியஇனம். அவர்கள் உரிமைக்காக போராடவில்லை. தங்கள் விடுதலைக்காக போராடுகின்றார்கள்." என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணி என்றாலும் சரி, முக்கிய தலைவர்கள் என்றாலும் சரி, முக்கிய வெளியீடுகள் என்றாலும் சரி சிறுபான்மையினம் என்கிற விடயம் அகற்றப்பட்டு தமிழ்மக்கள் ஒருதேசிய இனம் என்கிற விடயம் தான் முன்னுக்கு கொண்டு வரப்பட்டது.

அதுவும் தமிழரசுக் கட்சியின் உத்தியோக பூர்வ பத்திரிகையாக இருந்த சுதந்திரன் பத்திரிகையின் அடிப்பக்கத்தில் "தமிழ் சிறுபான்மையினத்தின் உரிமைக்குரல்" என்று தான் முதலில் வந்து கொண்டிருந்தது.

முற்றவெளிக் கூட்டத்துக்கு பிறகு "தமிழ்தேசிய இனத்தின் விடுதலைக்குரல்" என சுதந்திரன் பத்திரிகையின் அடி வரி மாற்றப்பட்டது. ஆகவே இது 70 களில் தீர்க்கப்பட்ட பிரச்சினை.

அன்று தீர்க்கப்பட்ட பிரச்சினையை சரியாக விளங்கிக் கொள்ளாமல் இப்போதும் சொல்லிக் கொண்டு வருகின்றார்கள் என்று சொன்னால் இவர்களை எப்படி திரும்பவும் தமிழ் அரசியல் தலைவர்கள் என்று ஏற்றுக் கொள்வது என்கிற கேள்வி இங்கே வருகின்றது. சிறுபான்மையினம் என்று சொல்லும் போது எங்களுக்கு பல நெருக்கடிகள் வருகின்றன.

இலங்கையின் அரச அதிகாரக் கட்டமைப்பினை ஏற்றுக்கொள்கின்றோம் என்று வந்து விடும். அப்படி வந்தால் சுயநிர்ணயமுடைய சுயாட்சி அதிகாரங்களை எங்களால் கோர முடியாது போய் விடும். இது மிகவும் முக்கியமான விவகாரம். நாங்கள் சிறுபான்மையினமல்ல. தனியான ஒரு தேசம். நாங்கள் விடுதலைக்காக போராடுகின்றோம் என்கிற அந்தக் கருத்து நிலையை மக்கள் மத்தியில் பேசுபொருளாக்கி கொண்டு செல்லும் செயற்பாட்டை கட்டாயம் செய்ய வேண்டும். ஊடகங்களும் அதில் வலுவான கவனத்தை குவிக்க வேண்டும். ●

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 29.07.2020 அன்று வெளியிடப்பட்டது.